பழமொழிகளை அதன் பொருளுடன் இணைத்திடுக.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.	குற்றம் செய்தவனின் மனசாட்சி அவனை வருத்திக் கொண்டிருக்கும்.
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.	எதையும் முறையாகப் பயிற்சி செய்து வந்தால்தான் அதில் நாம் வல்லமை பெறமுடியும்.
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்	கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி, சூழ்நிலை சாதகமாக இருக்கும்போதே வேண்டியதைச் சாதித்துக்கொள்ள வேண்டும்.
சிக்கனம் சீரளிக்கும்.	எல்லாரும் ஒன்றிணைந்து ஒருமித்த கருத்தோடு செயல்பட்டால் நல்வாழ்வு அமையும்.
சிறு துரும்பும் பல் குத்த உதவும்.	தேவைக்கு ஏற்பச் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்து வாழ்ந்தால் சிறப்புற வாழலாம்.
சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.	தேவையற்றது அல்லது அற்பமானது என நாம் நினைக்கும் பொருளும் தக்க வேளையில் நமக்கு உதவும்.

https://t.me/learntamilbyparamesvariperisamy

LIVEWORKSHEETS